# வழி காட்டும் மாணிக்கங்கள்

இமாம் முஸ்லிம், புகாரி ஆகியோர் சேகரித்த
ஹதீஸ்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட
நபி முஹம்மத் (ஸல்) அவர்களது சில கட்டளைகள்.

தொகுப்பு :
**ஹம்ஸா முஹம்மது ஸாலிஹ் அஜாப்**

இலவசமாக பதிப்பித்தோர்

**இலங்கை பைத்துல்மால் நிதி**
34/1, சிறபறி காடின்ஸ்,
பம்பலப்பிட்டி
கொழும்பு – 4.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிமுகம்

குர்ஆன், ஹதீஸ் இரண்டையும் அடிப்படையாக வைத்துக்கட்டி எழுப்பப்பட்டது இஸ்லாம்.

இச்சிறு கைநூல் ஹதீஸுக்கு ஒரு வழிகாட்டி ஆகும். மூன்றாம் ஒன்பதாம் நூற்றாண்டுகளைச் சேர்ந்த இமாம் முஸ்லிம், இமாம் புகாரி ஆகியோர் திரட்டிய ஹதீஸ்களிலிருந்து தொடுக்கப்பட்ட சில ஹதீஸ்கள் இதிலடங்கியுள்ளன. மூலப் பிரதியில் 74 ஹதீஸ்கள் இடம் பெற்றிருப்பினும், எமது நிதிநிலைமை இடந்தந்ததற்கேற்பச் சிலவற்றை இங்கு தந்துள்ளோம். இதனைத் தமிழில் தந்தவர் ஹாஜி எம். ஷரீப்.

அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்

இலங்கை பைத்துல்மால் நிதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1

# லாஇலாஹ இல்லல்லாஹ்

## (வணக்கத்துக்குரியவன் அல்லாஹ்வே)

## என்பதன் சிறப்புக்கள்

உள்ளத்தின் அடியிலிருந்து கூறப்படுகின்ற லாஇலாஹ இல்லல்லாஹ் என்ற கட்டளையையே இங்கு கொள்ளப்பட்டுள்ளது. புகழ்மிக்க நபித் தோழர் அபூ ஹுரைரா, நபியவர்கள் கூறியதாகத் தெரிவிக்கின்றார்: "நான் நபி (ஸல்) அவர்களிடம் கேட்டேன்; 'கியாமத் நாளிலே உங்களது ஷபாஅத்துக்கு (பரிந்து பேசுதலுக்கு) உரிமையானவர் யார்? தனது உள்ளத்தின் அடியிலிருந்து அல்லாவைத் தவிர வேறு நாயன் இல்லை யென்று மெய்யாகவே மொழிபவனே எனது ஷபாஅத்துக்குக் கியாமத் நாளையிலே விரும்பப்படுவான்... எனப் பதில் தந்தார் நபி பெருமான்,"

மேலும் நபியவர்கள் சொன்னதாக அறிவிக்கப்பட்டுள்ளது: 'அல்லாவைத் தவிர நாயனில்லை எனச் சாட்சி பகர்பவனை; அவனுக்குத் துணையில்லை, முஹம்மத் அவனின் தூதரும் அடியானுமாவார், ஈஸாவும் அவனது தூதரும் அடியானுமாவார், அவனின் தத்துவமும் 'கலாமுமே' மர்யமுக்கு அருளப்பட்டன, சுவர்க்கம் உண்மையானது, நரகம் உண்மையானது என்று நம்புபவனை, அவனது செயல்கள் எதுவாக இருப்பினும் சுவர்க்கத்துக்கு உரிமையாக்குவான் அல்லாஹ்."

மேலும் நபி பெருமான் கூறியதாக அறிவிக்கப்படுகின்றது; "அல்லாவைத் தவிர நாயனில்லை, முஹம்மத் அவனின் தூதுவர் என்று சாட்சி பகர்பவனைத் தொடுவதிலிருந்து அல்லாஹ் நரக நெருப்பைத் தடுத்து விடுகின்றான்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2

# துன்புற்றோருக்கு உதவுதல்

நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அறிவிக்கப்பட்டுள்ளது. "ஒரு முஸ்லிம் மற்றைய ஒவ்வொரு முஸ்லிமினதும் சகோதரனாவான். அவன் தன் சகோதரனை அநீதியாக நடத்த மாட்டான்; வேறொருவர் துன்புறுத்தவும் விடமாட்டான். ஓர் இன்னலின்போது தன் சகோதரனுக்கு உதவுபவனை, கியாம நாளிலே ஓர் இடர்ப் பாட்டிலிருந்து அல்லாஹ் காப்பாற்றுவான்; தன் சகோதரனுக்குப் பாதுகாப்பு அளிப்பவனுக்கு மறுமை நாளிலே அல்லாஹ் பாதுகாப்பளிப்பான். கடுந் துன்பத்துக்குக்குட்பட்ட ஒருவருக்கு உதவி செய்பவனது விடயங்களில் இவ்வுலகிலும் மறுமையிலும் இலேசை உண்டாக்குவான். ஒரு முஸ்லிமுக்குப் பாதுகாப்புக் கொடுப்பவனுக்கு இம்மையிலும் மறுமையிலும் அல்லா பாதுகாப்பளிப்பான். அவன் (அந்த அடியான்) மற்ற அடியானுக்கு உதவுங்காலமெல்லாம் அல்லாஹ்வின் உதவி கிட்டும். அறிவுப் பாதையைத் தேடுபவனுக்கு அல்லாஹ் சுவர்க்கப் பாதையை அமைத்துக் கொடுப்பான். அல்லாஹ்வின் வீட்டில் (பள்ளியில்) கூடி அவனது திரு வசனங்களை ஓதிப் படிக்கும் கூட்டத்தினர் மீது சமாதானமும், அமைதியும், அருளும் இறங்கும்; மலக்குகள் அவர்களைச் சூழ்ந்திருப்பர்; அவர்களைப்பற்றி அல்லாஹ் தன்முன்னே இருப்பவர்களிடம் பெருமையாகப் பேசுவான்; இச்செயலிலிருந்து பின் வாங்குபவனது பாதையில் முன்னேற்றமிராது."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3

# சுஜூதின் சிறப்புக்கள்

அபூ தல்ஹா கூறியதாக அறிவிக்கப்படுகிறது: "நபியவர்களின் ஊழியரான தவ்பானைச் சந்தித்தபோது, 'அல்லா என்னைச் சுவர்க்கத்திற் சேர்க்க நான் செய்யக் கூடிய ஒன்றைச் சொல்லுமாறு கேட்டேன். அவர் சொன்னார்: 'நான் இதனை நபியவர்களிடம் கேட்டேன். 'அதிகமாக ஸுஜூத் செய்வீராக, ஒவ்வொரு ஸஜதாவுக்கும் அல்லாஹ் உம்மை ஒரு படி (தரஜா) உயர்த்தி ஒரு பாவத்தையும் நீக்குவான் 'எனக் கூறினார்கள்." நபி (ஸல்) அவர்கள் கூறியதைத் தான் கேட்டதாகத் தோழர் உபாதா பின் அஸ்ஸாமித் அறிவிக்கின்றார். "அல்லாஹ்வின் சந்நிதியில் ஓர் அடியான் ஒரு ஸுஜூத் செய்யும் போது அவனுக்கு ஒரு நன்மை (ஹஸனா) கூட்டப்படுகின்றது, ஒரு பாவம் அழிக்கப்படுகின்றது; அவன் ஒருபடி (தரஜா) உயர்த்தப்படுகிறான்; ஆகவே அதிகமாக ஸுஜூத் செய்வீராக."

நபியவர்கள் கூறியதாக இன்னொரு தோழர் அறிவிக்கின்றார். "வலிமையும் சிறப்புந் தங்கிய நாயன் அல்லாஹ்வுக்கு, ஓர் அடியான் தன்முகத்தைக் கீழே வைத்து மிகவும் ஏழ்மையான நிலையில் ஸஜதாவில் இருப்பதைப் பார்ப்பதை விட விருப்பமான தொன்றில்லை."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4

# ஸத(க்)காவின் சிறப்புகள்

க.'.ப் பின் உஜரா, நபிகள் திலகம் திருவாய் மலர்ந்தருளியதாகத் தெரிவிக்கின்றார்: "ஓ க.'.ப் நியாயமற்ற முறையிலுண்டான சதையோ, இரத்தமோ ஒருபோதும் சுவர்க்கம் சேராது. அவற்றிற்குரிய இடம் அன்-நார் (நரக நெருப்பு) ஆகும். ஓக.'.ப் நாளாந்த வாழ்க்கையின் அடிப்படையில் மக்கள் இரு கூறாவர். ஒரு சாரார் தமது ஆன்மாவைச் சுதந்திரமாக வைத்துக்கொள்ள முனைவர்; மற்றையோர் அதனைக் கட்டிப் பிணைப்பர். க.'.பே தொழுகை ஒரு குர்பான் - அல்லாவிடம் நெருங்க ஒரு வழி; நோன்பு ஒரு கவசம்; ஸதக்கா (ஈகை) மலையிலுள்ள பனியைத் தண்ணீர் கழுவுவது போன்று பாவங்களைக் கழுவும்."

இதே ஹதீஸைக் குறிப்பிடத்தக்க சில மாற்றங்களுடன் நபி அவர்கள் தன்னிடங் கூறியதாக இன்னொரு தோழர் குறிப்பிடுகின்றார். "நன்மை (கைர்) யின் வாசல்களை உம்மிடம் கூறவா? நோன்பு ஒரு கவசம்; ஸதக்கா (ஈகை), தண்ணீர் நெருப்பை ஒழிப்பது போலப் பாவங்களை அழித்துவிடும்."

நபியவர்கள் கூறியதாக மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது: "ஸதக்கா, அதன் மக்களுக்காக (வாழ்நாளில் ஈகையிலீடுபட்டிருந்தோருக்காக) கப்ரின் நெருப்பைத் திட்டமாக அணைத்துவிடும். மறுமை நாளிலே ஒரு விசுவாசி தனது ஸதக்காவின் நிழலிலே இருப்பான்."

நபியவர்களிடம் மய்மூனா-பிந்த் ஸ.'.தி கேட்டார் அல்லாவின் தூதரே ஸதக்காவினைப் பற்றி எமக்குக் கூறுங்கள்" பதிலாக நபி அவர்கள் கூறினார்கள்: "பெருமையும் உயர்ச்சியுமுடைய அல்லாவின் திருப்தியை நாடி அதனைச் செய்பவருக்கு, அது நரக நெருப்புக்கு எதிரான ஒரு கவசமாகும்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5

# நோன்பு நோற்பதின் சிறப்புக்கள்

அபூ உமாமா கூறுகின்றார்: "ஒரு நல்ல செயலைச் செய்யக் கட்டளையிடுமாறு நான் நபி (ஸல்) அவர்களிடம் கேட்டேன். 'நோன்பு வைப்பீராக்; அதற்கு நிகரானதில்லை' என நபியவர்கள் கூறினார்கள். மறுபடியும், 'அல்லாவின் தூதரே ஒரு நல்ல செயலைச் செய்யக் கட்டளையிடுங்கள்' என்றேன். 'நோன்பு வைப்பீராக; அதற்கு நிகரான தில்லை' என மறுபடியுங் கூறினார் நபி மணி. மூன்றாம் முறையாக 'அல்லாவின் தூதரே , ஒரு நல்ல செயலைச் செய்யக் கட்டளையிடுங்கள்' என்றேன். 'நோன்பு வைப்பீராக; அதற்கு நிகரான தில்லை" என அவர்கள் கூறினார்கள்.

நபியவர்கள் கூறியதாக அறிவிக்கப்பட்டுள்ளது: "அல்லாஹ்வின் அடியான் அல்லாவின் திருப்தியையே நாடி ஒரு நாள் நோன்பு நோற்பானாயின், அதற்காக நரக நெருப்பிலிருந்து எழுபது வருட தூரம் தனது முகத்தைத் தூரமாக்கிக் கொள்வான்." இந்த ஹதீஸைக் கூர்மையாகச் சிந்தித்துப் பாருங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6

# அல்லாஹ்விடம் மன்னிப்புக்கோருதலின் சிறப்புக்கள்

நபி மணியவர்கள் கூறியதாக அறிவிக்கப்பட்டுள்ளது: "மனிதர்களே, மன்னிப்புக்கோரி அல்லாஹ்வின் பால் திரும்புங்கள், பிழை பொறுத்தலை வேண்டுங்கள். உண்மையாக தினமும் நூறு முறை மன்னிப்புக்கோரி அவன்பால் நான் திரும்புகின்றேன்."

நபி அவர்கள் கூறிதைதத் தான் கேட்டதாக அபூ ஹுறைரா தெரிவிக்கின்றார்: 'அல்லாஹ் மீது ஆணையாக , பிழை பொறுக்குமாறு நான் அல்லாவிடம் கேட்கின்றேன். ஒரு நாளைக்கு எழுபது முறைக்கு மேல் அவனிடம் முறையிட்டு மன்றாடுவேன்.'

நபி(ஸல்) அருளியதாக மேலுங் கூறப்பட்டுள்ளது: "உண்மையில், ஒரு வனாந்தரத்தின் நடுவிலே முன்பு இழந்த ஒட்டகையைக் கண்டபோது உங்களில் ஒருவருக்கு ஏற்படும் மகிழ்ச்சியை விட, ஓர் அடியான் மன்னிப்புக் கோருதல் அல்லாவிற்கு மகிழ்ச்சியைத் தருகின்றது."

இதேஹதீஸ் விரிவானதாகவும் கூறப்பட்டுள்ளது: நபி அவர்கள் கூறினார்கள், "உங்களிலொருவரது ஒட்டகை தண்ணீர், உணவுப் பொதிகளுடன் வனாந்தரத்தின் நடுவிலே காணாமற் போகின்றது. நம்பிக்கை இழந்தவனாக அவன் ஒரு மரத்தடியிலே நிற்கின்றான்; பக்கத்திலே அதுகாணப்படுகின்றது; அதன் கயிற்றைக் கையிலே பிடித்துக்கொண்டு மகிழ்ச்சிபொங்க, 'ஓ அல்லாஹ் நீ எனது அடிமை நான் உனது எசமான்' எனப் பிழையாகக் கத்திவிடுகின்றான். இந்த மகிழ்ச்சியைவிட, ஓரடியான் கோரும் பாவ மன்னிப்பு அல்லாவிற்கு மகிழ்ச்சி தருவதாகும்."

"மேலும் நபி (ஸல்) கூறியதாக அறிவிக்கப்படுகின்றது: மேலும் நபிபெருமானார் கூறுகின்றார்கள்: "பகலிலே பாவங்களைச் செய்தவர் மன்னிப்புக் கோருவதற்காக இரவிலே தன் அருட் கரங்களை அல்லாஹ் நீட்டுகின்றான். இரவிலே பாவம் செய்தவர் மன்னிப்புக் கோருவதற்காகப் பகலிலே தன் அருட்கரங்களை அல்லாஹ் நீட்டுகின்றான். சூரியன் மேற்கில் உதயமாகும்வரை (கியாம நாள் வரை) தொடர்ந்து இவ்வாறு அல்லாஹ் செய்கின்றான்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7

# இஸ்லாத்தின் முக்கிய அம்சங்கள்

முஆத் பின்ஜபல் கூறினார்: "நான் நபி பெருமானாருடன் ஒருமுறை பிரயாணஞ் செய்து கொண்டிருந்தேன். ஒருநாட் காலை அவரருகிற் சென்று கொண்டிருந்தபோது, 'இறை தூதரே சுவர்க்கத்திற் புகவும், நரகை விட்டுத் தூரமாகவும் ஒரு நற் கிரிகையைச் சொல்லித்தாருங்கள்' எனக் கேட்டேன். அவர்கள் கூறினார்கள்: 'அல்லாஹ் எவருக்கு அதை இலகுவாக்குவானோ, அந்த இலகுவான பெரிய விடய மொன்றை நீர் கேட்டுள்ளீர்; அல்லாஹ்வை மட்டும் வணங்குவீராக; எதனையும் அவனுக்கு இணையாக்க வேண்டாம்; ஒழுங்காகத் தொழவும்; ஏழை வரியைக் கொடுக்கவும்; ரம்ழானில் நோன்பு வைப்பீராக; புனித க.்.பாவைத் தரிசித்து ஹஜ் செய்வீராக;' தொடர்ந்தும் அவர்கள் கூறினார்கள்: 'உமக்கு நன்மையின் வாயில் பற்றிச் சொல்லவா? நோன்பு ஒரு கேடயம்; நெருப்பை நீர் அணைப்பது போலப் பாவங்களை ஸதக்கா அழித்துவிடும்; மேலும் நடு நிசியிலே ஒரு மனிதனின் தொழுகை ..... அப்போது பின்வரும் குர்ஆன் வசனங்களை ஓதினார்கள்: 'அவர்கள் (இரவில்) படுக்கையிலிருந்து தங்கள் விலாக்களை உயர்த்தி, தங்கள் இறைவனிடம் பயந்தும் நம்பிக்கை வைத்தும் அவனிடம் இரைஞ்சுவார்கள். அவர்களுக்கு நாம் அருளியவற்றிலிருந்து செலவு (தானம்) செய்வார்கள். அவர்களது நற்காரியங்களுக்கு ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள கண்குளிரும் பரிசுகளை ஒருவரும் அறியமாட்டார்" (32: 16-17)

மேலும் நபியவர்கள் கூறினார்கள்: 'முக்கியமான ஒன்றை, அதன் தூணை, அதன் உச்சத்தைச் சொல்லவா?" எனக் கேட்டுக் கூறினார்கள். 'முக்கியமான விடயம் இஸ்லாம்; அதன் தூண் தொழுகை; அதன் சிகரம் ஜிஹாத்.' 'மிக அவசியமான, முன் கூட்டியே தேவையான ஒன்றைச் சொல்லவா?' எனக் கேட்டபோது 'ஆம் அல்லாஹ்வின் தூதரே' என நான் பதிலளித்தேன். 'இதிலிருந்து உன்னைக்காப்பாற்றிக் கொள்' எனத் தனது நாவினைச் சுட்டிக் காட்டினார்கள். 'நாம் சொல்பவை அனைத்துக்கும் பொறுப்புடையவர்களாவோமா?' என நான் கேட்டேன். 'தமது நாக்கினால் விளைத்துக் கொள்பவற்றுக்கே நரகில் மக்கள் முகங் கொடுக்க நேரிடும்' என நபி பெருமான் (ஸல்) பதில் தந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8

# பெற்றோர் மீது அன்பு காட்டுதல்

அபூ ஹுரைரா அறிவிக்கின்றார்: ஒரு மனிதன் நபி (ஸல்) அவர்களிடஞ் சென்று, ஓஅல்லாஹ்வின் தூதரே, எனக்கு மிக நெருங்கியவராக இருக்கத் தகுதியுடையவர் யார்?' என்று கேட்டார். 'உமது தாய்' என நபியவர்கள் கூறவே 'அதற் கடுத்தவர் யார்' என அம்மனிதர் கேட்டார். 'உமது தாய்' என நபியவர்கள் பதிலளித்தனர். 'அடுத்து யார்' என அம்மனிதர் கேட்கவே 'உமது தாய்' என மூன்றாவது முறையும் பதிலளித்தார் நபி பெருமான். 'அடுத்துயார்' என அம்மனிதன் கேட்கவே, 'உமது தந்தை' என நபியவர்கள் விடையளித்தார்கள்.

இன்னொரு கூற்றுப்படி 'உமது தாய், அடுத்து உமது தகப்பன், அடுத்து உமது இனத்தவர்' என விடை பகர்ந்துள்ளார் நபி பெருமானார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9

# நியமமாகத் தொழுது வரல்

ஒரு நாள், நபியவர்கள் தொழுகையைப் பற்றிக் கூறிக் கொண்டிருந்தார்கள். "ஒழுங்காகத் தொழுபவருக்கு மறுமையிலே அது ஒளியாகவும் (விசுவாசி என்பதற்கு) சாட்சியாகவும், ஈடேற்றமாகவும் அமையும். அதனை ஒழுங்காகக் கடைப்பிடியாதோருக்கு அது ஒளியாக, சாட்சியமாக, ஈடேற்றமாக அமையாததால் அவர்கள் கோரா, பிர்அவ்ன், ஹமான், உபையின் கலாப் போன்றோருடன் மறுமை நாளில் இருப்பர்."

அனஸ் அறிவிக்கின்றார்: 'நபியவர்களின் விண்யாத்திரை (இஸ்றா) இரவின்போது தான் தொழுகை அவர்களுக்கு விதிக்கப்பட்டது. அப்போது அது நாளைக்கு ஐம்பது வேளையாக இருந்தது; பிறகு ஐந்தாகக் குறைக்கப்பட்டது. 'ஓ முஹம்மதே எனது கட்டளை என்றும் மாற்றப்படுவதில்லை. இந்த ஐந்து நேரத் தொழுகையும் ஐம்பது நேரத் தொழுகைக்குச் சமனாகும்' என இறைவன் அப்போது கூறினான்."

அல்லாஹ் கட்டளையிட்டதாக நபியவர்கள் கூறியதாக அபு கதாதா தெரிவிக்கின்றார்: 'உமது உம்மத்தவர்களுக்கு ஐந்து நேரத் தொழுகையை விதியாக்கினேன். குறிப்பிட்ட வேளைகளில் அவைகளை ஒழுங்காக நிறைவேற்றி என்னிடம் வருபவரைச் சுவர்க்கத்தில் நுழையவிட நான் பொருந்தியுள்ளேன். அப்படிச் செய்யாதோருக்கு என்னிடமிருந்து எந்தப் பொருத்தமுமில்லை."

நபி(ஸல்) கூறியதாக அபூ ஹுரைரா அறிவிக்கின்றார்: 'உமது வீட்டின் முன் ஓர் ஆறு இருந்து அதில் தினம் ஐந்து வேளை நீர் குளிக்கின்றீர். உமது உடம்பில் அழுக்கு இருக்குமா என நபிகள் கேட்க 'அழுக்கு இராது' எனத் தோழர்கள் கூறினார்கள். 'அப்படிப் பட்டதுதான் ஐவேளைத் தொழுகையும்; அவற்றால் உம் பாவங்களை அல்லாஹ் துடைக்கின்றான்' என நபியவர்கள் கூறினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10

# நன்னடத்தை

நபியவர்கள் கூறியதாக அபூ அத்தர்தா அறிவிக்கிறார்: 'மறுமை நாளிலே எழுப்பப்படும்போது நன்னடத்தையை விட, விசுவாசிகளுக்கு எதுவும் பலன் தராது. உண்மையிலே கொடியவர்களையும், கெட்ட வார்த்தை பேசுபவர்களையும் அல்லாஹ் வெறுக்கின்றான்.'

நபியவர்கள் கூறியதாக அபூஹுரைரா தெரிவிக்கின்றார்: "விசுவாசிகளில் சிறந்த நன்னடத்தை யுடையவனே தூய ஈமானுடையவனாவான்; உங்களில் மிக நல்லவர் யாரெனில் தமது மனைவிமாரை நன்கு நடத்துபவரே."

ஜாபிர் அறிவிக்கும் நபியவர்கள் கூற்று: "உங்களில் நன்னடத்தை உடையவரே நியாயத் தீர்ப்பு நாளில் எனக்கு மிக நெருங்கியவராகவும் மிக நேசமானவராகவும் இருப்பார். அதிகம் பேசுபவனும் தற்புகழ்ச்சிக்காரனும், செருக்குடையவனும் மறுமையில் என்னிலிருந்து தூரமானவனாகவும் மிக வெறுக்கப்படுபவனுமாக இருப்பான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11
# நல்ல குணங்கள்

நபி பெருமானாரிடம் பின்வருமாறு தான் கேட்டதாக ஸெய்த் அல்கைர் தெரிவிக்கிறார்: "அல்லாஹ்வின் தூதரே அல்லாஹ் விரும்புபவர்களின் அடையாளங்கள் எவை?' 'நீர் எப்படிப் பட்டவர்?' என நபியவர்கள் என்னிடம் கேட்டதும் பதிலாக நான் கூறினேன்: 'நான் நல்லதை (கைர்) விரும்புகின்றேன்; நல்லவர்களை விரும்புகின்றேன்; முடியுமான எல்லா நேரங்களிலும் நல்லதைச் செய்ய விரைந்து செல்வேன்: அது முடியாது போனால் அதற்காக வருந்துவேன்-அடுத்தமுறை அதனைச் செய்ய விரும்புவேன்.' நபியவர்கள் கூறினார்கள், 'அல்லாஹ் வேண்டுபவர்களது குணாதிசயங்கள் இவைதான். அவன் வேறு எதையும் நாடி இருந்தால் உம்மை வேறு வழியில் அமைத்திருப்பான்."

அபூ அய்யூப் அறிவிக்கின்றார்: நபியவர்களின் நான்கு ஸுன்னாக்களாவன: அடக்கம், வாசனை பாவிப்பு, திருமணம், பல்துலக்கல்.

நபியவர்கள் கூறியதாக அபூஹுரைரா அறிவிக்கின்றார்: 'உங்களில் மிக நல்லவர் யாரென்றும் மிகக் கெட்டவர் யாரென்றும் கூறட்டுமா?' மூன்று முறை அவர்கள் கேட்கவே மூன்று முறையும் ஸஹாபாக்கள் 'ஆம்' என்று கூறினார்கள். 'உங்களில் எவரது நற்குணங்கள் (கைர்) வெளிப்படையாகத் தெரியத் தீமைகள் மறைந்திருக்குமோ அவர்களே மிக நல்லவர். மிகக் கெட்டவர்கள் யாரெனில், அவர்களது கைர் மறைந்திருக்கும், தீமைகள் அப்படியிரா.

'மக்களுள் நல்லவர் யார்?' என நபிகளிடம் கேட்கப்பட்டதாக அபூ பக்ரா தெரிவிக்கின்றார். 'நீண்ட காலம் வாழ்ந்திருந்து நன்னடத்தையுமுடையவர்' என்றும் 'மிகக் கெட்டவர் யார்' என்று கேட்கப்பட்டபோது 'நீண்டகாலம் வாழ்ந்திருந்து துர்நடத்தையுடையவர்' என்றும் பதிலளித்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12
## பஜ்ர் தொழுகையின் சிறப்பு

இப்னு உமர் அறிவிக்கின்றார்: ஒரு மனிதர் நபிகளிடம், 'அல்லாவின் தூதரே, அல்லாஹ் சன்மானந் தரக்கூடிய ஒரு நல்ல காரியத்தைச் செய்ய எனக்குக் கூறுங்கள்" எனக் கேட்டார். 'கடமையான இரண்டு ரக்ஆ பஜ்ர் தொழுகையை (இரண்டு ரக்ஆ ஸுன்னத்துட்பட) நிலைப்படுத்திக் கொள்வீராக. அவை மிகச் சிறப்பானவை, என நபியவர்கள் பதில் தந்தார்கள்.

நபியவர்கள் கூறியதாக ஆயிஷா அறிவிக்கின்றார். 'சுப்ஹின் இரண்டு ரக் ஆ (சுன்னத்) தொழுகை இந்த உலகத்தையும் அதிலடங்கியுள்ள அத்தனையையும் விடச் சிறந்ததாகும்.'

# 13
## தொழுகையில் மனக்கட்டுப் பாடின்மையைத் தவிர்த்தல்

நபியவர்கள் மொழிந்ததாக அனஸ் அறிவிக்கின்றார்: 'என் மகனே, தொழுகையின் போது மனக்கட்டுப்பாடின்மையைத் தவிர்ப்பதை நிச்சயப்படுத்திக் கொள். அது பேரிழப்பை உண்டு பண்ணும்.'

அபூ ஹுறைரா கூறும் நாயக வாக்கு: "ஓரடியான் தொழுகைக்காக நிற்கும் போது, மேலான இறைவனது கரங்களில் இருக்கின்றான். வேறெங்கும் கவரப்பட்டுத் தன் பார்வையை அவன் செலுத்தினால், 'நீ எங்கே பார்க்கின்றாய்? என்னைவிடச் சிறந்த வொன்றையா? ஆதமுடைய மகனே, என்னிடம் வருவாயாக. நீ பார்க்கும் எல்லாவற்றையும் விடச் சிறந்தவன் நான்' என அல்லாஹ் கூறுகின்றான்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14

# ஆத்ம சாந்தியும் நேர்மையும்

முஆத் பின் ஜபல் தெரிவிக்கின்றார்: "நான் நபி (ஸல்) அவர்களிடம் கேட்டேன்; அல்லாஹ்வின் தூதரே எனக்கு அறிவுரை தாருங்கள் என்று. 'உமது நம்பிக்கையைச் சுத்தமாக்கிக் கொள்ளுவீராக. அப்போது நீர் செய்யும் சிறிய காரியங்களும் உமக்குப் போதுமானதாகும்,' என அவர்கள் பதிலளித்தார்கள். நபியவர்கள் கூறியதாகத் தூபான் தெரிவிக்கின்றார்: 'பரிசுத்தமான நம்பிக்கையுடையோர் ஈடேற்றம் பெற்று விட்டனர்; நல்வழிகாட்டலுக்கு அவர்கள் ஒளியாவர்; அவர்களை விட்டும் எல்லா இன்னல்களும் அகற்றப்படும்"

நபியவர்கள் கூறியதாக அபூ உமாமா தெரிவிக்கின்றார்: 'வலிமையும் உயர்வுமுடைய அல்லாஹ் தனது திருப்திக்காக, மனத் தூய்மையுடன் செய்யப்பட்ட நற்காரியங்கள் அல்லாதவற்றை ஏற்றுக் கொள்ளமாட்டான்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15
# சீரற்ற நடத்தைகள்

நபி(ஸல்) கூறியதாக அபூ தர்ர் அறிவிக்கின்றார்: 'மக்கள் எழுப்பப்படும் (கியாம) நாளிலே, அல்லாஹ் பேசவோ பார்க்கவோ விரும்பாத மூன்று வர்க்கத்தினர் உளர்; அவன் அவர்கட்கு அருள் செய்யமாட்டான்; கடுமையான தண்டனை அவர்கட்குண்டு.' இதனை நபி அவர்கள் மூன்று முறை திருப்பித் திருப்பிக் கூறினார்கள். 'அல்லாவின் தூதரே அவர்கள் எல்லாவற்றையும் இழந்தவர்களாக ஆவார்களே அவர்கள் யார்? என அபூதர்ர் கேட்டார். 'அவர்கள் தமது உடைமைகளைத் தமக்குப் பின்னால் இழுத்துவரக் கீழே (பூமியில்) விடுவர்; (ஆடம்பரத்தின் அடையாளமாக) தாம் செய்த உதவிகள், கொடைகள் பற்றிப் பேசுவர்; பொய் கூறிச் சத்தியஞ் செய்து தமது பொருட்களை விற்க முனைவார்கள்' என நபி பெருமானர் பதில் கூறினார்கள்.

நபியவர்கள் கூறியதாக, அபூ பர்ஸா அல்அஸ்லமி அறிவிக்கின்றார்: நான் உங்கள் விடயத்தில் மிகப் பயப்படும் காரியங்களாவன: உங்கள் வயிற்றுக்கும் இரகசிய உறுப்புக்களுக்குமான பெரிய ஆசையும், நம்பிக்கையிலிருந்து உங்களைத் தூரப்படுத்தும் துன்புறுத்தல்களுமாகும்",

நபிகள் கூறியதாக ஜாபிர்பின் அப்துல்லா அல்அன்சாரி தெரிவிக்கின்றார்: "சட்டத்தை மீறுவதில் கவனமாயிருங்கள். சட்டத்தை மீறுதல் நியாயத் தீர்ப்பு நாளிலே பெரும் இருட்டாக அமையும். உலோபத்தனத்தையிட்டும் கவனமாக இருங்கள். அது உங்களுக்கு முன்னிருந்தோருக்கு அழிவைத் தேடிக் கொடுத்துள்ளது..., ஒருவர் மற்றவரைக் கொல்லவும் சட்டமுரணான செயல்களைச் செய்யவும் அது அவர்களை வழி நடாத்தியுள்ளது."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 16

## அல்லாவிற்காக...

நபி பெருமான் கூறியதாக ஜாபிர் தெரிவிக்கின்றார்: 'ஒருவர் அல்லாவிடம் அடைக்கலம் வேண்டினால் அவருக்குப் பாதுகாப்பும், புகலிடமும் கொடுங்கள். ஒருவர் அல்லாவின் பெயரால் எதுவுங் கேட்டால் அதனை அவருக்குக் கொடுங்கள்; ஒருவர் உங்களை அழைத்தால் அவருக்குப் பதில் கூறுங்கள். ஒருவர் உங்களுக்கு உதவினால் அதற்குப் பிரதியுபகாரஞ் செய்யுங்கள். அப்படிப் பிரதி உபகாரஞ் செய்ய உங்களிடம் எதுவும் இல்லையெனில், அப்படிச் செய்ததாகத் தோன்றும்வரை அவருக்காகப் பிரார்த்தியுங்கள்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 17

## சூரா அல் பாத்திஹாவின் சிறப்பு

### (திருக் குர்ஆனின் முதல் அத்தியாயம்)

நபிமணி அவர்கள் கூறியதாக அபூ ஹுரைரா தெரிவிக்கிறார்: "அல்லாஹ் கூறியுள்ளான்; 'வணக்கத்தை எனக்கும் எனது அடியானுக்குமிடையில் இரு கூறாகப் பிரித்துள்ளேன். அடியான் எதை வேண்டுகிறானோ அவன் அதைப் பெறுவான். அல்ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமீன் எனும்போது 'அடியான் என்னை மிக விருப்புடன் புகழ்ந்து விட்டான்' என்று அல்லாஹ் கூறுவான். மாலிகி யவ்முத்தீன் எனும்போது, 'எனது அடியான் என்னை அதிக அளவில் புகழ்ந்து விட்டான்' என்பான் இறைவன். இய்யாக ந.:.புது வஇய்யாக நஸ்தஈன் எனும் போது, 'இது எனக்கும் எனது அடியானுக்கு மிடையேயுள்ளது. அவன் எதைக் கேட்டானோ அதைப் பெறுவான்' என்று அல்லாஹ் கூறுவான். இஹ்தினஸ்... வழல்லாழ்ழீன் எனும்போது இது எனது அடியானுக்குரியது. அவன் எதைக் கேட்டானோ அதைப் பெறுவான்' என்று அல்லாஹ் கூறுவான்."

அபூஸஈத் பின் அல் முஅல்லா தெரிவிக்கின்றார்: நான் ஒரு நாள் பள்ளியில் இருக்கும்போது நபியவர்கள் அழைத்தார்கள். நான் உடனே அங்கு செல்லவில்லை. சில நிமிடங்களில் அங்கு சென்று, 'அல்லாஹ்வின் தூதரே நான் தொழுது கொண்டிருந்தேன்" என்றேன். அவர்கள் கூறினார்கள், "அல்லாஹ் கூறுகின்றான்; அல்லாவின் அழைப்புக்கும் அவன் தூதுவரின் அழைப்புக்கும் பதில் கொடுங்கள்." 'நீர் இங்கிருந்து செல்லுமுன் திருக்குர்ஆனின் மிகப்பாரிய ஸூராவைப் பற்றிக் கூறுகிறேன். எனக்கு அருளப்பட்ட மிகப்பாரிய ஸூரா 'அல்ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமீன் "(முதல்ஸூரா) ஆகும்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18

# உலக சம்பத்துக்களின் இன்பத்தை வெறுத்தல்

அபூ அப்பாஸ் ஸஹ்ல் பின் ஸ. ஃத் அல் ஸ. ஃதி அறிவிக்கிறார். "ஒரு மனிதன் நபியவர்களிடம் வந்து, 'அல்லாவின்தூதரே அல்லாவும் மக்களும் என்னை விரும்பக் கூடிய நல்ல காரியத்தைச் சொல்லுங்கள்' என்று கேட்டார். பதிலாக, 'உலகத்துப் பொருட்களின் இன்பத்தை வெறுத்துவிடுக; அல்லா உம்மை விரும்புவான். மக்களுக்குரியதை அவர்கட்கு விட்டு விடுக; அவர்கள் உம்மை விரும்புவார்கள்' என நபி மணி கூறினார்கள்."

அப்துல்லா பின் மஸ்ஊத் அறிவிக்கின்றார்: நபியவர்கள் ஒரு சாதாரண தும்புப் பாயில் படுத்துறங்கினார்கள். அவர் எழுந்திருந்தபோது பாயின் அடையாளங்கள் அவரது உடலில் இருந்தன. நாங்கள் ஒரு விரிப்புத் தரட்டுமாவெனத் தோழர்கள் கேட்டனர். 'இந்த உலகில் நான் யார்? அவசரமாக அவ்விடத்தைவிட்டுச் செல்வதற்காக ஒரு மரத்தடியில் தங்கியிருக்கும் பிரயாணி' என நபிமணி பதிலளித்தார்கள்.

உபைதுல்லா பின் முஹ்ஸான் அல் அன்ஸாரி அல்குதாமி தெரிவிக்கின்றார், நாயகம் (ஸல்) கூறியதாக; "உங்களில் யார் தனது குடும்பத்தவர்களிடையே பாதுகாப்பாகவும், நற்சுகத்துடனும், அன்றைக்குரிய உணவுகளை உடையவராகவும், காலையில் எழுந்திருக்கின்றாரோ, அவர் இந்த உலகில் மிகச் சிறந்தவைகளைப் பெற்றவராவர்."

ஸ. ஃத் பின் அபீவக்காஸ் அறிவிக்கின்றார்: ஒரு மனிதன் நபி யவர்களிடஞ் சென்று, "அல்லாவின் தூதரே எனக்குச் சில அறிவுரை கூறுங்கள்" எனக் கேட்டார். 'மக்களுக்குரியதை அவர்களிடம் விட்டு விடும். மேலும் பேராசையைத் தவிர்த்துக் கொள்வீராக. அது உண்மையில் வறுமையாகும். மனவேதனையைப் பின்னர் தரக்கூடிய எல்லாக் கருமத்தையும் தவிர்த்துக்கொள்க' என நபிமணி விடை பகர்ந்தனர்.

"ஓர் அந்நியனைப் போல அல்லது ஒரு பிரயாணியைப் போன்று இவ்வுலகில் இருப்பீராக" எனத்தனக்கு நபிமணி கூறியதாக இப்னு உமர் அறிவிக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 19

# நரக நெருப்பிலிருந்து பாதுகாப்பு

நபி (ஸல்) கூறியதாக அல்ஹாரிஸ் பின் முஸ்லிம் அல் தமினி தெரிவிக்கின்றார். "காலைத் தொழுகையை முடித்துக்கொண்டு வேறெதுவும் பேசு முன், அல்லாஹும்ம அஜ்ரினீ மினன்னார் (அல்லாவே நரக நெருப்பிலிருந்து என்னைக் காப்பாற்று) என்று ஏழு முறை கூறுவீராக. அன்று நீர் மவுத்தாக நேர்ந்தால் நரக நெருப்பிலிருந்து அல்லாஹ் உம்மைக் காப்பாற்றுவான். மக்ரிப் தொழுகையின் பின்பு அவ்வாறு ஏழுமுறை கூறும். அன்று இரவில் நீர் மவுத்தாக நேர்ந்தால் நரக நெருப்பிலிருந்து அல்லாஹ் உம்மைக் காப்பாற்றுவான்."

# 20

# சுவர்க்க லோகத்து மனிதன்

அபூ ஹுரைரா அறிவிக்கின்றார்: ஒரு நாட்டுப்புற மனிதன் நபியவர்களிடஞ் சென்று, "அல்லாவின் தூதரே, சுவர்க்க லோகம் புக நான் செய்ய வேண்டியஒரு கருமத்தைச் சொல்லுங்கள்" எனக் கேட்டார். பதிலாக நபியவர்கள் கூறினார்கள்: "அல்லாவை (மட்டும்) வணங்குவீராக; கடமையான தொழுகைகளை நிறைவேற்றுக; உரிய ஏழை வரியை (ஸகாத்) கொடுக்கவும்; ரமழானில் நோன்பு நோற்பீராக." அந்த மனிதன், 'அல்லாவின் மீது ஆணையாக நான் இவற்றைவிடக் குறைவாகவோ, அதிகமாகவோ செய்ய மாட்டேன்" என்று கூறினார். "சுவர்க்க லோகத்து மனிதனைப் பார்க்க விரும்புபவர் அந்த மனிதனைப் பார்த்துக் கொள்ளவும்" என்று நபியவர்கள் பின்பு குறிப்பிட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21

# ஒருவருக்கு உணவளித்தல், முகமன் கூறுதல், சுன்னத்தான இரவு வணக்கத்தைச் செய்தல்....

அபூ ஹுரைரா கூறுகின்றார்: நான் நபியவர்களிடம் "அல்லாவின் தூதரே, உங்களைக் காணும் போது எனது ஆத்மா சாந்தியடைகின்றது, மனம் திருப்தியடைகின்றது, எல்லா விடயங்கள் பற்றியும் சொல்லுங்கள்" என்று கேட்டேன். 'எல்லாம் தண்ணீரிலிருந்தே படைக்கப்பட்டன' என அவர்கள் கூறினார்கள. 'நான் சுவர்க்கம் புகுவதற்குச் செய்ய வேண்டியவற்றைச் சொல்லுங்கள்' என்று கேட்டேன். 'உணவை (தர்மமாக) அளிப்பீராக; உமது சகாக்களை வரவேற்பீர்களாக; உமது இனத்தவரோடு நல்லுறவை வைத்துக் கொள்வீராக; மக்கள் தூக்கத்திலிருக்கும் வேளையில் (சுன்னத்தான) இரவுத் தொழுகைகளைத் தொழுவீராக; அப்போது நீர் சுவர்க்கம் புகுவீர்' என நபியவர்கள் கூறினார்கள். அபூ மாலிக் அல் அஷ்அரி அறிவிக்கின்றார்: நபியவர்கள் கூறினார்கள், "சுவர்க்கத்திலே பளிங்குபோன்ற அறைகள் இருக்கின்றன. வெளியேயிருந்து உள்ளே உள்ளவைகளைப் பார்க்க முடியும். உள்ளே இருந்து வெளியே உள்ளவர்களைப் பார்க்க முடியும். தர்மமாக உணவளிப்பவருக்கும், தனது சக முஸ்லிம்களை (இன்முகத்துடன்) வரவேற்பவர்கட்கும், மக்கள் தூக்கத்திலே இருக்கும்போது இரவு வணக்கத்திலீடுபட்டிருப்பவருக்கும் விசேடமாக அவற்றை அல்லாஹ் அமைத்துள்ளான்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 22
## அயலவர்களிடம் தாராளத் தன்மை காட்டல்

நபி (ஸல்) கூறியதாக அபூதர்ர் அறிவிக்கின்றார்: "அபூ தர்ரே, நீர் கூழ் காய்ச்சினால் அதில் அதிகமாக நீரைச் சேர்த்துக் கொள்ளும். (அதனைக் கொண்டு) உமது அயலவர்க்குச் சிறிது வழங்குக."

நாயகமவர்கள் கூறியதாக அபூஹுரைரா தெரிவிக்கின்றார். "அல்லா மீதும் மறுமை நாள் மீதும் நம்பிக்கை உடையவர்கள் தமது அயலவர்க்குத் தீங்கு செய்தல் கூடாது. அவர்கள் தமது விருந்தினருடன் தாராளமாக நடந்து கொள்ள வேண்டும்; நல்லதையே பேச வேண்டும் அல்லது மவுனமாக இருக்க வேண்டும"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 23

## ஏழைகளுக்கு இரக்கங் காட்டுதல்

அபூ தர்ர் கூறுகின்றார், "எனது அன்பு நண்பர் முஹம்மத் (ஸல்) ஏழு காரியங்களைச் செய்யுமாறு என்னைப் பணித்தார்.

1. ஏழைகள் மீது கருணையுடையவராக இருக்க வேண்டும்.

2. என்னைவிட வசதி குறைந்தவர் பற்றிச் சிந்திக்க வேண்டும். என்னை விட வசதி கூடியவர்களைப்பற்றியல்ல.

3. எனது இனத்தவர்களுடன் நல்லுறவை வளர்த்துக்கொள்ள வேண்டும். அவர்கள் என்னை ஒதுக்கினாலுஞ் சரி.

4. அதிகமாக, லாஹவ்ல வலாகுவ்வத இல்லா பில்லாஹ் (அல்லாவிடமிருந்தேயொழிய எந்த வலிமையும், அதிகாரமுமில்லை) என்று கூற வேண்டும்.

5. உண்மை (அது கசப்பாக இருப்பினுஞ் சரி) பேச வேண்டும்.

6. உண்மையுடையோராயிருப்பது பற்றிக் கடிந்து கொள்பவர் விடயத்தில் சிரத்தை காட்ட வேண்டாம்.

7. மனிதரிடமிருந்து எதனையும் கேட்க வேண்டாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 24
## செல்வம் வறுமை என்பவற்றின் அர்த்தம்...

நபி (ஸல்) அவர்கள் தன்னிடம் கூறியதாக அபூதர்ர் அறிவிக்கின்றார்: "அபூ தர்ரே அதிகமாகப் பணம் வைத்திருப்பதுதான் செல்வம் என நீர் நினைக்கிறீரா?" 'ஆம், அல்லாவின் தூதரே' என நான் பதிலளித்தேன்.

அவர்கள் சொன்னார்கள், 'செல்வம் மனத்திற்தானுண்டு, வறுமையும் அப்படியே. மனதில் செல்வம் பதிந்துள்ளவன் உலக வாழ்க்கையிலே தனது பாக்கியங்கள்பற்றி அலட்டிக்கொள்ள மாட்டான். வறுமை மனத்திற் குடிகொண்டிருப்பவன்....... உலக சம்பந்தமாக அவன் சேர்ப்பதெல்லாம் அவனைச் செல்வந்தனாக்காது, அதன் உலோபத் தனமே அவன் ஆத்மாவைத் துன்புறுத்தும்."

## 25
## பெருமையும் உயர்வுமுடைய அல்லாவைப் பயப்படல்

அபூ தர்ர் தெரிவிக்கின்றார்; நான் நபியவர்களிடம் 'அல்லாவின் தூதரே எனக்கு அறிவுரை கூறுங்கள்' என்று கேட்டேன். 'அல்லாஹ்வைப் பயந்துகொள்க, அதுவே எல்லாக் கருமங்களினதும் இருதயமாகும்' என்று அவர்கள் பதிலளித்தார்கள். 'அல்லாவின் தூதரே மேலுங் கூறுங்கள்' என்று நான் கேட்டேன். 'குர்ஆனை ஓதுவீராக. அது உலகில் உமக்கு ஒளியாகும்; மறுமையில் புதையலாகும்' என நபியவர்கள் கூறினார்கள்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 26
# தருமஞ் செய்தல்

அனஸ் பின் மாலிக் அறிவிக்கின்றார். "தமீம் கிளையைச் சேர்ந்த ஒருவர் நபியவர்களிடஞ் சென்று, 'அல்லாவின் தூதரே, என்னிடம் அதிக பணமும், குடும்பமும், சொத்தும் உண்டு; நான் எவ்வாறு தருமஞ் செய்யலாம்?' எனக்கேட்டார். 'முதலில் ஸகாத் கொடுப்பீராக; அது செல்வத்தைத் தூய்மையாக்கும்; உமது இனத்தவருடன் நல்லுறவை வைத்துக் கொள்வீராக. உமது சொத்தில் ஏழைகட்கும், உமது அயலவர்கட்கும், உம்மிடம் ஸதகா (தர்மம்) கேட்பவர்கட்கும் பங்குண்டு என்பதை அறிவீராக' என நபி பெருமான் கூறினார்கள்."

# 27
# மனிதர்களுட் சிறந்தவர்

அபூ ஸஈத் அல்குத்ரி அறிவிக்கின்றார்: ஒரு மனிதன் நபி(ஸல்) அவர்களிடம் கேட்டார், 'அல்லாவின் தூதரே மனிதர்களுட் சிறந்தவர் யார்?' அதற்கு நபியவர்கள், 'தனது சொத்தையும் ஆத்மாவையும் அல்லாவின் பாதையில் செலவு செய்யும் ஒரு விசுவாசி' எனப் பதில் கொடுத்தார்கள். 'அதற்கடுத்த நல்லவர்' என அம்மனிதர் கேட்டார். 'ஒரு மலையிலே, அல்லாஹ்வை வணங்குவதற்காகத் தன்னைத் தனிமைப்படுத்திக் கொள்பவன்" என மொழிந்தார் நபியவர்கள்.

நபியவர்கள் கூறியதாக அபூஸஈத் மேலுந் தெரிவிக்கின்றார். 'ஒரு நாள் நெருங்கி விட்டது. அன்று, ஒரு முஸ்லிம் சில செம்மறியாடுகளையே தனது சொத்தாகக் கண்டு, அவற்றுடன் மழைபொழியும் மலைச் சரிவுகளிலே, உலக பாசங்கள் அனைத்தையும் துறந்து, விசுவாசத்துடனே அலைந்து திரிவான்.'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 28
## பிரிந்து செல்லச் சிறந்த பாதை...

நபியவர்கள் கூறியதாக அபூஹுறைரா தெரிவிக்கின்றார். 'மனிதர்களுடன் அமர்ந்திருந்து உலக விடயங்களைப் பற்றியே பேசிக் கொண்டிருந்துவிட்டு (உலகைப்) பிரிந்து செல்ல முன், 'ஸுப்ஹானக அல்லாஹும்ம வபி ஹம்திக அஷ்ஹது அன்லாஇலாஹ இல்லா அன்த அஸ்த.ஃபிருக வஅதூபு இலைக' (ஓ அல்லாஹ் பெருமை உனக்கே, புகழனைத்தும் உனக்கே, உன்னைத் தவிர நாயனில்லை என நான் திடமாகக் கூறுகிறேன். நான் உண்னிடம் மன்னிப்புக் கோருகின்றேன். உன்னிடம் இரங்கிக் கேட்கின்றேன்) என்று மொழிபவன் அந்தக் கூட்டத்தார் மத்தியிற் செய்த பாவங்கள் அனைத்தையும் அல்லாஹ் பொறுப்பான்."

# 29
## மன்னிப்புக் கோரச் சிறந்த வழி

நபியவர்கள் மொழிந்ததாக ஷத்தாத் பின் அவ்ஸ் தெரிவிக்கின்றார்: "அல்லாவிடம் மன்னிப்புக் கோரச் சிறந்த வழி வருமாறு கேட்பதாகும்: 'அல்லாஹும்ம அன்த ரப்பீ லாஇலாஹ இல்லா அன்த கலக்தனீ வஅன அப்துக. வஅன அலா அஹ்திக. வவஉதிக மஸ்தத.ஃஅஉது பிக மின் ஷர்ரி மா ஸன.ஃது. அபூ அவ்லக பினி.ஃமதிக அலய்ய. வஅபூ பிதன்பி, ப.ஃபிர்லீ பஇன்னஹூ யா ய.ஃபிருஸ் துனுப இல்லா அன்த (இறைவா, நீயே என் எசமான், உன்னைத் தவிர நாயனில்லை. நீயே என்னைப் படைத்தாய். நான் உனது அடிமை. எனக்கு முடிந்தவரை உனக்களித்த வாக்கை நிறைவேற்றுகிறேன். நான் செய்த பாவத்தை விட்டும் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன். எனது பாவங்களைத் தொட்டும் உன்னிடம் முறையிடுகிறேன். எனது பாவங்களை மன்னிப்பாயாக. உன்னைத் தவிர மன்னிப்போர் யாருமில்லை.) மனவுறுதியுடன் பகலில் இந்த துஆவினை ஓதுபவர் பகலில் மரணித்தால்சுவர்க்கம் புகுவார்கள். (அதேபோல) இரவில் ஓதுபவர் இரவில் மரணித்தாலும் சுவர்க்கம் புகுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 30
# சுவர்க்கத்துப் பயிர்கள்

தான் ஒரு மரத்தை நடுவதைக் கண்ட நபியவர்கள் சொன்னதாக அபூ ஹுறைரா தெரிவிக்கின்றார்: "இதைவிட நல்ல மரங்களைப் பற்றிச் சொல்லவா? 'ஸுப்ஹானல்லாஹி வல்ஹம்து லில்லாஹி வலாஇலாஹ இல்லல்லாஹு வல்லாஹு அக்பர்,' என்று கூறுவீராக. (இப்படிச் சொல்லும்) ஒவ்வொரு முறையும் சுவர்க்கத்தில் உமக்காக ஒரு மரம் நடப்படும்."

# 31
# வீட்டில் ஒரு வணக்கத் தளம்

ஆயிஷா கூறுகின்றார்: நபி அவர்கள் தன்னையும் ஸஹாபாக்களையும் வீடுகளில் ஒரு வணக்கத் தளத்தை ஒதுக்குமாறும் அந்த அறையைச் சுத்தமாகவும் மணமூட்டப்பட்டதாகவும் வைத்துக் கொள்ளுமாறும் கட்டளையிட்டார்கள்.

வீடுகளில் ஒரு வணக்கத் தளத்தை ஒதுக்கி அதனைச் சுத்தமாக வைத்திருக்குமாறு நபியவர்கள் தமக்குக் கட்டளையிட்டதாக ஸம்றா பின் ஜுந்தப் தெரிவிக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 32
# கடைசிக் கட்டளை

நபி (ஸல்) கூறியதாக இப்னு மஸ்ஊத் தெரிவிக்கின்றார்: "எனது விண் யாத்திரையின் இரவில் நபி இப்ராஹீம் அவர்களைச் சந்தித்தேன். அவர்கள் சொன்னார்கள், 'முஹம்மதே உங்கள் மக்களுக்கு எனது ஸலாத்தை கூறுவீராக. மேலும் அவர்களிடம் சொல்லுங்கள்; சுவர்க்கம் நல்ல மண்ணையும் இனிமையான தண்ணீரையுங் கொண்டது. அதிலுள்ள மரங்களெல்லாம், அம் மக்கள் ஓதும் 'ஸுப்ஹானல்லாஹி வல்ஹம்து லில்லாஹி வலாஇலாஹ இல்லல்லாஹு வல்லாஹு அக்பர்' என்பதன் விளைவாகும்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 33

# முஸ்லிமுக்கான பத்துக் கட்டளைகள்

1. தினமும் உமக்கு முடிந்த வரையில் குர்ஆனை ஓதுவீராக. முடிந்தவரை அதிகமாக, அல்லாஹ்வின் சாந்தி, சமாதானத்தை அவனது தூதுவருக்கு வேண்டுவீராக.

2. கடமையான ஐவேளைத் தொழுகையையும், ஒழுங்காக உரிய வேளையில் தொழுவீராக. அத்துடன் ஸுன்னத்தான இரவுத் தொழுகை (கியாமுல் லைல்) ழுஹா (முற்பகல்) தொழுகை அவை இரண்டு ரக்ஆ வெனினுஞ்சரி தொழுவீராக.

3. உரிய ஸகாத்தைக் கொடுப்பீராக. மிகச்சிறிய அளவாயினுஞ்சரி, தினமும் தர்மம் கொடுப்பீராக. அது முடியாவிடின் மக்கள் மீது நற்குணமுடையவராயிருப்பீராக. ரமழானிலும், ஒவ்வொரு மாதமும் மூன்று தினங்களிலும் நோன்பு வைப்பீராக.

4. அல்லாஹ் விரும்புபவர்களுடன் சேர்ந்து கொள்வதற்காக தூதுவர் முஹம்மத் (ஸல்) அவர்களையும் அவர்கள் குடும்பத்தவரையும் நேசிப்பீராக. உமது பெற்றோருக்கு நல்லவராக இருப்பீராக.

5. துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றவர்களுடன் இருப்பதற்காக, நல்ல உணவை (சட்ட முறைப்படி கிடைத்தவை) உண்பீராக. உமக்கு அது பாதகமாக இருப்பினும், மக்களுக்கு நீதியானதையே செய்வீராக. மக்களுடன் கனிவாகவும், முறையாகவும் நடந்து கொள்வீராக.

6. துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றவர்களுடன் இணைந்து கொள்வதற்காகவும், மறுமை நாளிலே மேன்மையோடிருக்கவும் மனத் தூய்மையோடு லாஇலாஹ இல்லல்லாஹ் என்று அதிகமதிகமாகக் கூறிக் கொள்வீராக. உமது பாவங்களையும் எல்லா மு,ஃமீன் (விசுவாசி) களின் பாவங்களை மன்னிக்குமாறும் அல்லாவிடம் கேட்பீராக. அல்லாஹ்வை மறந்தவர்களுடன் என்றும் சேர்ந்து கொள்ளாதிருப்பீராக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. மறுமையிலே அல்லாஹ்வுக்கு மிக நெருங்கிய மிகவும் மகிழ்ச்சியுடையவர்களானவர் (முகர்ரபூன்) களுடன் சேர்ந்து கொள்வதற்காகப் பின்வருமாறு ஓதிக் கொள்க: 'அல்ஹம்து லில்லாஹி வஸலாமுன் அலா இபாதிஹில்லதீனஸ்தபா' (எல்லாப் புகழும் அல்லாவுக்கே. அவனது தேர்ந்தெடுக்கப்பட்ட அடியான் மீது சாந்தியுண்டாவதாக)

8. அல்லாவைத் துதிப்போருடன் சேர்ந்து கொள்வதற்கும், உமது குடும்பத்தினரை (பிள்ளைகளை) நல்வர்களாகவும் பக்தியுடையவர்களாகவும் ஆக்குவதற்காகவும் அடுத்த இரு வசனங்களையும் ஓதுவீராக.

(அ) 'என் இறைவேன! நீ என் மீதும் என் தாய் தந்தை மீதும் புரிந்த உன்னுடைய அருட்களுக்கு நான் நன்றி செலுத்த அருள் புரிவாயாக. உனக்குத் திருப்தியளிக்கக் கூடிய நற்கருமங்களையும் செய்யக்கூடிய பாக்கியத்தை எனக்கு அருள் செய்து, உனது கிருபையால் உன்னுடைய நல்லடியார்களுடனும் என்னைச் சேர்த்து விடுவாயாக.'

(அத் : 27, பாகம் 19)

(ஆ) 'என் இறைவனே! நீ என்மீதும் என் தாய் தந்தை மீதும் புரிந்த அருளுக்காக உனக்கு நான் நன்றி செலுத்தி, உன்னுடைய திருப்தியை அடையக்கூடிய நற்கருமங்களைச் செய்யக் கூடியதானதை (நல்லறிவை) தந்தருள்வாயாக. எனது சந்ததியை நீ சீர்திருத்தி வைப்பாயாக. நிச்சயமாக நான் உன்னையே நோக்கினேன். மேலும் (உனக்கு முற்றிலும் வழிபட்ட) முஸ்லிம்களில் நான் உள்ளேன்.'

(அத் : 36 : பாகம் 26 (15)

9. பின்வரும் குர்ஆன் வசனங்களை ஓதுவீராக. அது உமது வாழ்நாளில் நல்வழியைத் தொடர வழி காட்டும்: 'விசுவாசிகேள! நீங்கள் குனிந்து சிரம்பணிந்து இறைவனை வணங்குங்கள். நன்மையே செய்து கொண்டிருங்கள். அதனால் சித்தியடையலாம்'

(22 : 17 (77)

10. கருமங்களின் இருதயம் 'இறைவனை 'விசுவாசிக்கிறேன்' என்று கூறி நேர்வழியைப் பின்பற்றுதலாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed at Ceylon Printers Ltd.